# செய்தி வெளியீடு

## அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு உணவு துறை அமைச்சர் அவர்கள் இன்று (21.8.2009) தலைமைச் செயலகத்தில் பருப்பு போன்ற பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் பொது விநியோகத் திட்ட செயல்பாடு குறித்து உயர் அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்கள்.

சமீபகாலங்களில் துவரம் பருப்பு, சர்க்கரை போன்ற உணவு பொருட்களின் வெளிச்சந்தை விலை கணிசமாக உயர்ந்துள்ளதன் பின்னணியில் வியாபாரிகள் மற்றும் பெரிய நிறுவனங்களின் பதுக்கல் நடவடிக்கைகள் காரணமாக உள்ளதாக சில தகவல்கள் கிடைத்துள்ளதை தொடர்ந்து இருப்பு கட்டுபாட்டு ஆணைகளை தீவிரமாக அமுல்படுத்த சிறப்பு குழுக்கள் அமைத்து ஆய்வு செய்யவும், கட்டுபாட்டு ஆணைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச இருப்பு வரம்பிற்கு அதிகமாக இருப்பு வைத்திருந்தால் அப்பொருட்களை பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டது. இக்கட்டுபாட்டு ஆணைகளின் அடிப்படையில் அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள் மற்றும் சர்க்கரையின் இருப்பு விவரங்களை மாதம் ஒருமுறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர், துணை ஆணையருக்கு இருப்பு வைத்திருக்கும் வியாபாரிகள்/நிறுவனங்கள் அறிக்கையாக அனுப்ப வேண்டும்.

நியாய விலை கடைகளில் துவரம் பருப்பு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை மாவட்ட வாரியாக ஆய்வு செய்தார்கள். ஜுலை மாதத்தில் நகர்வு செய்யப்பட்டு, 9,208 டன் துவரம் பருப்பு அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 50% அட்டைதாரர்கள் பயன் அடைந்துள்ளனர். ஆகஸ்ட் மாதத்தில் 20.8.2009 வரை 8,845 டன் துவரம் பருப்பு நகர்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளில் சுமார் 8,063 டன் துவரம் பருப்பு இருப்பில் உள்ளது. மேலும் பொது விநியோக திட்டத்தில் வழங்குவதற்காக உள்நாட்டு துவரம் பருப்புடன் கனடா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பும்

கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கொள்முதல் பணிகளை தீவிரபடுத்தவும் தேவையான அளவிற்கு இருப்பு வைத்து பொது விநியோக கடைகளின் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், வெளிசந்தையில் துவரம் பருப்பின் விலையை கட்டுப்படுத்தும் வண்ணம் பிற மாநிலங்கள் மற்றும் கனடா நாட்டிலிருந்தும் பருப்பு இறக்குமதி செய்து அமுதம் சில்லறை அங்காடிகள் மூலமாகவும் கூட்டுறவு மொத்த விற்பனை அங்காடிகள் மூலமாக கொள்முதல் விலையில் விற்பனை செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும் நியாய விலை கடைகளின் மூலம் பொருள் விநியோகம் முறையாக நடக்க வேண்டுமென்றும், துவரம் பருப்பு உட்பட அனைத்து கட்டுப்பாடு பொருட்களும் முறையாக விநியோகிப்பதை கண்காணிக்க சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களில் வாகனத்துடன் ஒரு சிறப்பு பறக்கும் படை ஒன்று தினசரி ஆய்வில் ஈடுபடவேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் உத்திரவிட்டார்கள். சென்னையை பொருத்தமட்டில் இரண்டு ஆய்வு குழுக்கள் சம்பந்தப்பட்ட பறக்கும் படை குழுவினரை 9445045602 அல்லது 9445000152 (சென்னை வடக்கு) மற்றும் 9445045603 அல்லது 9445000160 (சென்னை தெற்கு) ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். இதுசம்பந்தமாக ஆணையர் அலுவலகத்தை 28592255 என்ற தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளலாம். கடைகளை முறையாக திறந்து வைக்கவோ அல்லது துவரம் பருப்பு போன்ற பொருட்களை முறையாக விநியோகிக்க தவறும் நியாய விலை கடை ஊழியர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வு கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. ராஜாராம், இ.ஆ.ப. ஆணையர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.எம். வீர சண்முக மணி, இ.ஆ.ப. நிர்வாக இயக்குனர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர், கூட்டுறவு துறை, ஆகியோர் பங்கு பெற்றனர்.